**CCE PF**
**CCE PR**
**REVISED & UNREVISED**

**D**

ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢ ಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ, ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD, MALLESWARAM, BANGALORE – 560 003**

ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಪರೀಕ್ಷೆ, ಮಾರ್ಚ್/ಏಪ್ರಿಲ್ — 2019

**S. S. L. C. EXAMINATION, MARCH/APRIL, 2019**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

## MODEL ANSWERS

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

CODE NO. : **10-T**

ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

**Subject : First Language — TAMIL**

( ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ & ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / **Private Fresh & Private Repeater** )

ದಿನಾಂಕ : 21. 03. 2019 ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : **125**

Date : 21. 03. 2019 ] **[ Max. Marks : 125**

பகுதி - அ

**I.** ஒரு தொடரில் விடை தருக : **16 × 1 = 16**

1. இறைவன் ஆனந்த மாக்கடலாவது எப்போது ?

*Ans.* :

பாசக்கட்டினை ஒழிக்கும் போது

2. நிலம் என்னும் நல்லாள் யாரைக் கண்டதும் நகுவாள் ?

*Ans.* :

எம்மிடத்தில் எதுவுமில்லை என்று சோம்பி இருப்பாரைக் கண்டு நிலம் என்னும் நல்லாள் நகுவாள்

3. இளையான்குடி மாறர் கறிக்காக எதனைப் பறித்தார் ?

*Ans.* :

பருவமுறாத சிறிய இலைக் கறிப் பயிர்களைப் பறித்தார்.

4. பெண்கள் எவை போயின என்று கும்மியடித்தனர் ?

*Ans.* :

நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின.

5. பசுவின் இயல்பு பற்றி கவிஞர் கூறுவது என்ன ?

*Ans.* :

வைக்கோல் கன்றை வருடி பால் சுரப்பது.

6. வள்ளவர் கூறும் புலவர் இயல்பு யாது ?

*Ans.* :

உவப்பத் தலை கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்

7. திரு. வி. க சொற்பொழிவை எவ்வாறு நிகழ்த்துவார் ?

*Ans.* :

குறிப்புகளை ஒன்று விடாமல் முறைப்படி தொகுத்து அழகுபெற அமைத்து முடிப்பார்.

8. இளம் பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இரு வகையினர் யாவர் ?

*Ans.* :

தமக்கென வாழ்வோர் மற்றும் பிறர்க்கென வாழ்வோர்

9. இன்றைய இளைஞன் இடறிவிட வேண்டுவனாக வைரமுத்து கூறுவன யாவை ?

*Ans.* :

தன்னம்பிக்கையைச் சுட்டெரிக்கும் இலக்கியங்களையும், ஏற்பாடுகளையும் இடறி விட வேண்டும்.

10. இலங்காவியின் அருங்காட்சியத்தில் நாம் காணும் கடல் உயிரினங்கள் யாவை ?

*Ans.* :

ஆமைகள், நண்டுகள், பல வண்ண மீன்கள், பாம்புகள்

11. பம்பன் இயற்றிய இரண்டு நூல்களின் பெயர்களை எழுதுக ?

*Ans.* :

ஆதிபுராணம், விக்ரமார்ச்சுன விஜயம்..

12. புதரில் விதைத்த வித்து போன்றவை எவை ?

*Ans.* :

அறம் இல்லாதவன் தலைமை, ஒழுக்கம் இல்லாதவன் தவம். ஒழுக்கத்தைக் கடைபிடிக்காதவன் அழகு.

13. சி.எப்.சி (C.F.C) என்றால் என்ன ?

*Ans.* :

குளோரோ ஃப்ளோரோ கார்பன்

14. விடுகதைகளைக் கொண்டு எவற்றை அறிய முடியும் ?

*Ans.* :

வட்டார வழக்குகள், மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் காலமாற்றத்தின் சாயல்கள்

15. தொடை என்றால் என்ன ?

*Ans.* :

அடிகளிலும், சீர்களிலும், எழுத்துக்கள் ஒன்றி வருவது தொடை.

16. அணி என்றால் என்ன ?

*Ans.* :

செய்யுளைச் சொல்லாலும், பொருளாலும் அழகுபடப் புனைவது அணியாகும்..

**II. பின்வரும் வினாக்களுக்கு மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 16 × 2 = 32**

17. பாண்டிய மன்னன் சிவபெருமானை பிரம்பால் அடித்தது ஏன் ?

*Ans.* :

சிவபெருமான் வந்தி என்ற முதிய பெண்மணியின் பிட்டுக்காக மண் சுமந்து பிரம்படி பெற்றார்.

18. நீதிசாரம் என்ற நூல் பற்றி எழுதுக ?

*Ans.* :

கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் ஓலைச்சுவடியாக கண்டு எடுக்கப் பட்டது. மரம் வளர்த்தால் நரகம் இல்லை.

19. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியாக வள்ளுவர் கூறுவது யாது ?

*Ans.* :

மகன் தந்தைக்கு செய்யும் உதவி, "இவன் தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தானோ" என்று பிறர் பேசும்படி செய்வதாம்.

20. செய்யுளின் உறுப்புகளை எழுதுக.

*Ans.* :

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை.

21. சங்கத் தலைவி புளிக்குழம்பு சமைக்க மேற்கொண்ட செயல்கள் யாவை ?

*Ans.* :

முற்றிய கட்டித் தயிரைக் காந்தள் விரலால் துழாவுதல். கழுவாத கைகளால், நழுவும் ஆடையச் சரி செய்தாள். குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை மணக்க புளிக்குழம்பு சமைத்தாள்.

22. தீப்பெட்டி ஆபீஸ் பஸ்கள் குழந்தைகளை எவ்வாறு வெளியே தள்ளின ?

*Ans.* :

கரும்புத் துண்டை மென்று, சாறை விழுங்கி விட்டு, சக்கையைத் துப்புவது போல், வெளியே தள்ளின.

23. பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்கள் இந்திப்பயிர் செழிக்கத் தமிழ் நீர்தான் தேவை என கூறக் காரணமென்ன ?

*Ans.* :

பேராசிரியர் சேதுப்பிள்ளை வெள்ளிக் கூசாவொன்றில் நீர் கொண்டு வருவார். இந்தித் துறைத் தலைவர் டாக்டர் சங்கரராசு நாயுடு, இந்த நன்னீரை, நாடி, ஓடியோடி வருவார். எனவே சேதுப்பிள்ளை அவர்கள் இந்திப் பயிர் செழிக்கத் தமிழ் நீர் தேவை என்றார்.

24. சிந்தனையைத் தூண்டும் இரண்டு விடுகதைகளை விடையுடன் எழுதுக ?

*Ans.* :

வளைந்து நெளிந்து ஓடிவரும் பாம்பு அல்ல

தாவித் தாவி குதித்து வரும் குரங்கு அல்ல

ஓயாது இரைந்திடும் வண்டு அல்ல. - அது என்ன ? விடை கடல் அலை.

வட்ட வடிவாள் வரவரத் தேய்வாள். முற்றும் மறைவாள்.

மூன்றாம் நாள் முளைப்பாள். அவள் யார் ? விடை - நிலா

25. சொற்பொருள் பின்வருநிலையணி என்றால் என்ன ?

*Ans.* :

சொல்லோ, பொருளோ, மீண்டும் மீண்டும் அடுக்கி வந்து, பொருள் தருவது

(எ.கா)

பற்றுக பற்று அற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு.

26. மாணிக்கவாசகர் சிவனைப் போற்றி வணங்கும் சிறப்பினை எழுதுக.

*Ans.* :

ஒளியாய் விளங்கும் திருமேனி உடையவன். உருவம் இல்லாதவன். முதல், இடை, முடிவானவன். பாசக்கட்டினை ஒழிக்கும் பேரின்பக் கடல் போன்றவன்.

27. அருவிக்கும், மனித குலத்திற்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமையை பட்டுக்கோட்டையார் எவ்வாறு விளக்குகிறார் ?

*Ans.* :

மலை உச்சியில் ஊறும் அருவிகள் ஒரே வழியில் கலக்கின்றன. மனித குலம் மட்டும் உயர்வும் தாழ்வும் வளர்த்து ஒற்றுமை இல்லாமல் அடித்துக் கொள்கிறது.

28. இறந்தகாலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது ?

*Ans.* :

இறந்த காலத்தில் கட்டப்பட்டதுதான் தாஜ்மஹால். ஆனால் அந்த இறந்த காலம் தாஜ்மஹா ன் மேல் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

29. முதலைக் குகையின் சிறப்பம்சம் என்ன ?

*Ans.* :

முதலை போன்ற தோற்றமுடைய குகை. கோழியின் தோல்களை கட ல் எறிந்தால், பல கழுகுகள் பறந்து வந்து, தோல்களை கொத்திச் செல்கின்றன. ஓணான், பாம்புகள், உள்ளன.

30. "ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்" என்ற பழமொழியை விளக்குக.

*Ans.* :

வானில் உலவும் சூரியனைக் கையால் மறைப்பவர்கள் இல்லை. அதுபோல், பரந்த புகழ் பெற்ற ஆற்றல் உடையவரின் புகழை, தகாத வார்த்தைகள் கூறி மறைக்க முடியாது.

31. "மரைமலர் அடி" இதில் உள்ள உவமையை விளக்கி எழுதுக.

*Ans.* :

தாமரை மலர் போன்ற திருவடி என்பது பொருள். இறைவனின் திருவடி, தாமரை மலருடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

32. அடுக்குத் தொடரை எடுத்துக் காட்டுடன் விளக்குக ?

*Ans.* :

பொருளுடைய சொற்கள் பல அடுக்கி வருவது, அடுக்குத் தொடர் எனப்படும்.

(எ.கா)

போ, போ

தீ, தீ

**III. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 11 × 3 = 33**

33. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை ?

*Ans.* :

தொழிற்சாலைகளை இயக்குதல். அனல் மின்சாரம் தயாரிக்க உதவுதல்.

சாலைகள் அமைப்பதற்கு துணையாக இருத்தல்.

34. வைரமுத்து, இளைஞன் தன்னை எதைப் போன்று வழி நடத்திக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார் ?

*Ans.* :

கழுதையில் சவாரி செய்கிறவன், கழுதையின் வாயருகில் கேரட்டை காட்டிக் கொண்டே போவதைப் போல், உனது இலட்சியத்தைக் காட்டிக் கொண்டே உன்னை நீ வழி நடத்து என்கிறார்.

35. கிராமத்துப் பெண்குழந்தைத் தொழிலாளர் பற்றி கி. ராஜநாராயணன் என்ன கூறுகிறார் ?

*Ans.* :

வயசுக்கு வந்த பெண்கள் மட்டுமே வீட்டுக்குள் உட்கார்ந்து கொண்டு உடம்பை, முன்னும், பின்னும் ஆட்டிக் கொண்டே தீப்பெட்டி ஒட்டுகிறார்கள். இவர்கள் மீது வெயில் பட்டுப் பல வருஷங்கள் ஆகின்றன. அரங்கு வீட்டின் இருட்டில் வளர்க்கப் பட்ட முளைப்பாரிப் பயிர்கள் போல் வெளுத்து காணப்படுகிறார்கள்.

36. வெண்பாவின் பொது இலக்கணம் கூறுக.

அல்லது

பிறிது மொழிதல் அணியை விளக்குக.

*Ans.* :

ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் வரும்.

காய்ச்சீரும், அகவற்சீரும்,

வெண்சீர் வெண்டளையும்,

இயற்சீர் வெண்டளையும் வரும்.

வேறு சீர்கள் வராது.

இறுதி அடியின் இறுதி சீர் நாள்,

மலர், காசு, பிறப்பு என்ற

வாய்பாடுகளுள் ஒன்றால் முடியும்

(எ.கா.)

உடையார் முன் இல்லார் போலேக் - கற்றுங் கற்றார்

கடையரே கல்லாதவர்

அல்லது

கவிஞன் தான் சொல்லக் கருதிய பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்துவதற்காக, அதனோடு ஒத்த பிறிதொன்றினைச் சொல்வது பிறிது மொழிதல் அணியாகும்.

(எ.கா.)

பீ  பெய் சாகாடும் அச்சிறும் - அப்பண்டம்

சால மிகுத்துப் பெயின்

37. அடியின் வகைகளை விளக்குக.

அல்லது

வேற்றுமை அணியை விளக்குக

*Ans.* :

அடிகள் ஐந்து வகைப்படும், அவை

1. குறளடி - இரண்டு சீர்களைக் கொண்டது
2. சிந்தடி - மூன்று சீர்களைக் கொண்டது
3. அளவடி - நான்கு சீர்களைக் கொண்டது
4. நெடிலடி - ஐந்து சீர்களைக் கொண்டது
5. கழிநெடிலடி - ஆறும் அதற்கு மேற்பட்ட சீர்களையும் கொண்டது.

(அல்லது)

வெளிப்படையாகவேனும், குறிப்பாகவேனும் இரு பொருள்களுக்கிடையே அமைந்த ஒப்புமையைப் புலப்படுத்தும் வண்ணம், இரண்டையும், ஒன்றாகக் காட்டிய பின் வேற்றுமையைக் கூறுவது

(எ.கா)

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட வடு.

38. பாரதிதாசன் யாருக்கு என்ன புகழாரம் சூட்டுகிறார் ?

*Ans.* :

பொதுநல உணர்வோடு, பிறர்க்கென வாழ்ந்து வருவோர், தூய உள்ளம், அன்புள்ளம், பெரிய உள்ளம், தாயுள்ளம் கொண்டவர்கள் என்று புகழாரம் சூட்டுவார் பாரதிதாசன்.

**இடம் சுட்டிப் பொருள் விளக்குக :**

39. "குழி நிரம்பாத புன்செய் குறும்பயிர் தடவி"

*Ans.* :

இடம் - பெரிய புராணம்

விளக்கம் - இளையான்குடி மாறன், பருவமுறாத இலைக் கறிப் பயிர்களை கையினால் தடவிப் பாசப் பழி முதலை அறவே பறிப்பவர் போல், வேரோடு பிடுங்கி வந்து,கறிக்காக மனைவியார் கைகளில் கொடுத்தார்.

40. "அன்னைக்கு ஆபீஸுக்கு லீவு விடுவாங்களா சார் ?"

*Ans.* :

இடம் : சுற்றுச்சூழல்

விளக்கம் : இயற்கையின் படைப்புகளை மனிதன் அழிக்க முயன்றால், பெரிய பிரளயமே வந்துடும். கடல் கொந்தளிக்கும், சூறாவளி வீசும், எரிமலை வெடிக்கும், பூகம்பம் வரும், என்றார் ஆசிரியர். அதற்கு அவர் நண்பர் அன்னைக்கு ஆபீசுக்கு லீவு விடுவாங்களா? என்றார்.

41. "எம் தமிழ்ப் பாவையைச் சுமந்து செல்லுங்கள்."

*Ans.* :

இடம் : கண்ணகி கோயில் செய்த சேரன் செங்குட்டுவன்

விளக்கம் : தமிழ் மன்னர்களை இகழ்ந்த, வடவர்களை நோக்கி, 'கனகா விசயா எம் தமிழ் பாவையைச் சுமந்து செல்லுங்கள். இதுவே உமக்கு ஏற்றது. வடவர் இனியாவது தமிழகம் பழித்தல் ஒழியட்டும்.

42. "ஞாலம் கருதினும் கை கூடும்."

*Ans.* :

இடம் : திருக்குறள்

விளக்கம் : செய்யும் செயலை அதற்குரிய காலத்தோடு இடத்தினையும், அறிந்து பொருந்தச் செய்தால், உலகம் முழுவதையும் அடையக் கருதினாலும், அது நிறைவேறும்.

43. "சொந்தமில்லாதவர் வந்தவர் ஆள"

*Ans.* :

இடம் : நாட்டு வாழ்த்து

விளக்கம் : இந்திய நாடு என்னுடைய நாடு என்று தினந்தோறும் பாடு. நம் நாட்டுக்குச் சொந்தமில்லாது எங்கிருந்தோ வந்தவர் நம் நாட்டை ஆள நாம் தூங்கிக் கிடந்தது போதும்.

**IV. பின்வரும் வினாக்களுக்கு எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : 3 × 4 = 12**

44. இக்கோயில் கருங்கல்லால் ஆனதா ! மரத்தாலனதா ! என்று செங்குட்டுவன் வியந்ததன் காரணமென்ன விளக்குக.

*அல்லது*

கிராமத்தின் மாலை நேரக் காட்சிகளை கி. ராஜநாராயணன் வழி நின்று விளக்குக.

*Ans.* :

கல்லால் ஆனதா ? மரத்தால் ஆனதா? மண் கொண்டியற்றியதா ! அன்றிப் பொன் கொண்டியற்றியதா ! மரத்தின் நெளிவையும், வளைவையும், எப்படி கல் ல் ஏற்றினீர்? ஓ! கல் ல் வடித்தது என்று யாரும் கூறார். நிற்பது கண்ணகியே! மருளும் வண்ணம் இயற்றிய உங்களுக்கு ஆயிரம் காணி மானியம் விட்டேன்

அல்லது

மாலை நேரத்தில் ஓடி விளையாடிய குழந்தைகள் எல்லாம் இப்போது உட்கார்ந்து, காலை நீட்டிக் கொண்டோ, மடக்கிக் கொண்டோ, உடம்பை முன்னும், பின்னும் ஆட்டிக் கொண்டோ, தீப்பெட்டி ஒட்டுகிறார்கள். அவர்களால் பேச முடியாது. சிரிக்க முடியாது. கதைகள் சொல் மகிழ முடியாது. அவர்கள் எல்லோரையும், தீப்பெட்டி ஆபீஸ்காரன் பைசாவினால், தரையோடு தரையாக அறைந்து விட்டான்.

45. “இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்” என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியை விவரிக்கவும்.

*அல்லது*

இலட்சியம் குறித்து வைரமுத்து கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

*Ans.* :

சேதுப் பிள்ளைக்கு விருப்பமான உணவில் ஒன்று தயிர் வடை. மாணவியர் தயார் செய்தனர். விருந்தில் கலந்து கொண்ட இந்தித் துறைத் தலைவர் தயிர்வடையைச் சுவைத்து உண்டார். சென்னையில், எந்த விடுதியில் தயாரிக்கப்பட்டதோ ? என்றார். சேதுப்பிள்ளை மாணவியர் பக்கம் தம் கரத்தை நீட்டி “இவர்கள் கை வண்ணம் இங்கு கண்டோம்“ என்ற கம்பன் கவித் தொடரை நினைவூட்ட அனைவரும் சிரித்தனர்.

அல்லது

இளைஞனே, உனது இலட்சியம் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் கூட இருக்கலாம் அல்லது சூரிய மண்டலத்தைப் போல் தொடமுடியாத தூரத்திலும் இருக்கலாம். ஏதாவது ஒன்று இருக்கட்டும். கழுதையின் வாயருகில் கேரட்டைப் போல், உனது இலட்சியத்தைக் காட்டிக்கொண்டே வழிநடத்து, பதினேழாவது வயதி ருந்து, இருபத்து நான்காவது வயதிற்குள் உன் திசையை தீர்மானம் செய்யாவிட்டால், பாறையில் மோதிய பந்தாய் திரும்ப நேரும். ஒரு துறையில் நீ வாழ நினைப்பது உன் விருப்பம். அந்தத் துறையை நீ வாழ வைப்பது உன் இலட்சியம்.

46. சீதை இலங்கையில் இருந்த நிலை பற்றி அனுமன் கூறியன யாவை ?

*அல்லது*

இளையான்குடி மாறன் மனைவியார் சிவனடியாருக்கு அமுது படைக்க மேற்கொண்ட செயல்களை எழுதுக ?

*Ans.* :

இலங்கை என்ற நகரத்தின் ஒரு புறத்தே, ஒளிமயமாகத் திகழ்வதுமான, ஒரு பொன்மயமான கற்பகச் சோலையின் உள்ளே, இலக்குவன் புல்லால் வேய்ந்த பர்ண சாலையில் சீதை வீற்றிருந்தாள். பேய்கள் கூட்டமும் கண்டு அஞ்சும்படி அளவற்ற அரக்கியர் கூட்டத்தின் நடுவே சீதை இருந்தாள். இரக்கம் என்ற பண்பு பெண் வடிவம் கொண்டு, கொடுமை மிக்க சிறையில் சிக்கிக் கொண்டது போல் சீதை இருந்தாள்.

அல்லது

இளையான்குடி மாறர் கொண்டு வந்த முளை நெல் ல் சேற்றை நீக்கினார்.

அடுப்பெரிக்க கூரை வரிசுச்களை வெட்டினார்.

நெல்லைப் பதமாக்கி, வறுத்து குற்றி, அரிசியாக்கி, உலையில் இட்டு அமுதாக்கினார்.

பருவமுறாத இலைக் கறிப் பயிர்களை பல வகையான கறிகளாக்கி சமைத்தார்.

**V. பின்வரும் பாடலை அடி பிறழாமல் எழுதுக : 1 × 4 = 4**

47. “பட்டங்கள் ஆள்வதும் ........................” எனவரும் பெண் விடுதலைக் கும்மி.

*அல்லது*

“இனிமைத் தமிழ் மொழி எமது” என வரும் மொழி வாழ்த்துப் பாடல்.

*Ans.* :

**நாட்டு வாழ்த்து**

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.

எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கே பெண்

இளைப்பில்லை காணென்று கும்மியடி.

அல்லது

## மொழிவாழ்த்து

இனிமைத் தமிழ் மொழி எமது - எமக்கு
இன்பந்தரும்படி வாய்த்த நல் அமுது
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்றபேறு.
தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை
நனியுண்டு, நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்.

**VI. 48. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக : $4 \times 1 = 4$**

தமிழ் இலக்கிய வானில் முழு நிலவாய் ஒளிவீசும் ஒப்பற்ற நூல் திருக்குறள். டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் முதன் முத ல் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இரஷியஅறிஞர் ' யோ டால்ஸ்டாய்' மற்றும் ஜெர்மனிய அறிஞர் ஆல்பர்ட் சுவைட்டர் போன்றோர் திருக்குறளால் ஈர்க்கப் பெற்றவர்கள் ஆவர். பிரெஞ்சு நாட்டின் தலை சிறந்த எழுத்தாளர் எம். அரியல் தமிழ் இலக்கியத்தில் மிகப் பெரிய சாதனை படைத்த படைப்பிலக்கியம் திருக்குறள் என்று பாராட்டியுள்ளார்.

வினாக்கள்:

i) தமிழ் இலக்கிய வானில் முழு நிலவாய் ஒளிவீசும் நூல் எது ?

ii) திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார் ?

iii) இரஷிய அறிஞர் யார் ?

iv) எம். அரியல் திருக்குறளை எங்கனம் பாராட்டியுள்ளார் ?

*Ans. :*

i) திருக்குறள்

ii) டாகடர் ஜி. யு. போப்

iii) யோ டால்ஸ்டாய்

iv) தமிழ் இலக்கியத்தில் மிகப்பெரிய சாதனை படைத்த படைப்பிலக்கியம் திருக்குறள்.

**பகுதி - ஆ**

**VII. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுதல் :** **10 × 1 = 10**

49. மகனை சான்றோன் எனக் கேட்டபோது மனம் மகிழ்பவர் ........................................ .

(A) தந்தை (B) தாய்

(C) அத்தை (D) மாமா.

*Ans.* :

(B) தாய்

50. ஐந்து சீர்களைக் கொண்டது ........................................ .

(A) கழிநெடிலடி (B) குறளடி

(C) சிந்தடி (D) நெடிலடி.

*Ans.* :

(D) நெடிலடி

51. ஆசிரியப்பாவின் ஓசை ................................ .

(A) செப்பலோசை (B) தகவலோசை

(C) அகவலோசை (D) கூவலோசை.

*Ans.* :

(C) அகவலோசை

52. குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுதல் ................................ .

(A) உழிஞை (B) தும்பை

(C) வாகை (D) பாடாண்.

*Ans.* :

(B) வாகை

53. முகிலா 'கல கல' எனச் சிரித்தாள். இத்தொடரில் 'கல கல' என்பது .............................. .

(A) இரட்டைக்கிளவி (B) அடுக்குத் தொடர்

(C) ஆகுபெயர் (D) எச்சம்.

*Ans.* :

(A) இரட்டைக் கிளவி

54. “பொங்கல் உண்டான்” என்பது ........................................ .

(A) சினையாகுபெயர் (B) பொருளாகு பெயர்

(C) பண்பாகு பெயர் (D) தொழிலாகு பெயர்.

*Ans.* :

(D) தொழிலாகு பெயர்

55. ஆகா! என்ன இனிமையான பாடல். இத்தொடர் எவ்வகை வாக்கியம் ........................................ .

(A) வியப்பு வாக்கியம் (B) வினா வாக்கியம்

(C) செய்தி வாக்கியம் (D) கட்டளை வாக்கியம்.

*Ans.* :

(A) வியப்பு வாக்கியம்

56. கடலும் கடலைச் சார்ந்த இடமும் ........................................ .

(A) குறிஞ்சி (B) முல்லை

(C) மருதம் (D) நெய்தல்.

*Ans.* :

(D) நெய்தல்

57. “கடிவேல்” இதில் கடி என்பது ........................................ .

(A) உறுதி (B) கூர்மை

(C) மணம் (D) கார்ப்பு.

*Ans.* :

(B) கூர்மை

58. ‘வெப்சைட்’ - என்பதன் தமிழ் சொல்........................................ .

(A) இணையம் (B) மின்அஞ்சல்

(C) வலைதளம் (D) கணினி.

*Ans.* :

(B) வலைதளம்.

**VIII. தொடர்புபடுத்தி எழுதுக: 4 × 1 = 4**

59. புல்லால் பர்ணசாலையை
அமைத்தவன் இலக்குவன்
சீதையை நிலத்தோடு பெயர்த்து
எடுத்துக் கொண்டு சென்றவன் ..........................

*Ans.* :

இராவணன்

60. சான்றோர் ஆக்குபவன் தந்தை
வேல் வடித்துக் கொடுப்பவன் .............................. .

*Ans.* :

கொல்லன்

61. மகளிர் கையில் காய்களைக் கொண்டு விளையாடுவது - அம்மானை
மகளிர் கைகளைத் தட்டிக் கொண்டு ஆடுவது ............................ .

*Ans.* :

கும்மி

62. கவளம் கண்டதும் கரையும் காக்கை
மேகம் மறைத்தாலும் கூவும் ........................................ .

*Ans.* :

சேவல்

**பகுதி இ**

**IX. 63. செய்திக்குறிப்பு 1 × 5 = 5**

நீவிர் வாழும் பகுதியில் உள்ள மதுக்கடையை நீக்கக் கோரி காவல் துறை அதிகாரிக்கு ஒரு கடிதம் வரைக,

*அல்லது*

உம் பள்ளியில் நடைபெறும் அறிவியல் கண்காட்சியைக் காண வருமாறு உன் நண்பனுக்குக் கடிதம் வரைக.

*Ans.* :

நாள்

இடம்

அன்புள்ள.................

மதிப்பிற்குரிய ..

கடிதப் பொருள்

இவண்

எழுதுவோர் பெயர்

பெறுவோர் முகவரி

**X. 64. கட்டுரை வரைதல் :** **1 × 5 = 5**

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை எழுதுக:

அ. கணினி விளையாட்டுகளால் கவனம் சிதறும் சிறுவர்கள்

ஆ. பட்டாசுப் புகையால் உண்டாகும் தீமைகள்

இ. உனக்குப் பிடித்த கதையும் காரணமும்.

*Ans.* :

- தலைப்பிற்கேற்ற முன்னுரை
- தலைப்பை ஒட்டிய பக்கத் தலைப்புகள்
- கட்டுரையின் நோக்கம்
- நிறைவுறும் வகையில் வ யுறுத்தல்
- முடிவுரை.